எடுக்கப்படுகிறது. இதிலே '0' ரிசல்ட் விழுக்காடு பெற்றுள்ள பள்ளிகளில் இரண்டு செவிடர் பள்ளிகளாக இருக்கின்றன; ஒன்று ஜவ்வாது மலையிலே இருக்கின்ற வன உயர்நிலைப்பள்ளி ; வேறு சில அரசாங்கப் பள்ளிகள் முதலியவை. 'சென்டெம்' பெற்ற பள்ளிகளுக்கு கல்வியமைச்சர் என்ற முறையில் நாம் பாராட்டுப் பத்திரத்தை அனுப்புகிறோம்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலில் 100 சதவீதம் பெற்ற பள்ளிகளில் அரசுப் பள்ளிகள் இருபது என்று சொன்னார்கள். இருந்தாலும் இது 50 சதவீதத்திற்கும் குறைவாகவே இருப்பது என்பது உண்மையாகிறது. மேலும் இப்படிப்பட்ட பள்ளிகள் நகராட்சிப் பள்ளிகளா அல்லது அரிசன நலத்துறைப் பள்ளிகளா அல்லது நேரடியாகவே கல்வித்துறை மூலம் நடத்தப்படும் பள்ளிகளா? இந்தக் குறைபாட்டுக்குக் காரணம், உரிய காலத்திலே போதுமான ஆசிரியர்கள் கிடைக்காமையும், அவர்களுக்கு அவ்வப்போது புத்தக வசதி காலத்திலே கொடுக்கப்படாமையும்தான் காரணம் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சீரோ ரிசல்ட் வாங்கிய பள்ளிகளில் அரிசன நலப் பள்ளி ஒன்றுகூட இல்லையென்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். ஆனால், குறைபாடு என்று வருகின்றபொழுது, நாம் புத்தகங்கள் தருகின்றோம், அல்லது வேறு பல உதவிகளைச் செய்கிறோம் என்றாலும் கூட ஆசிரியர்கள் கொஞ்சம் கவனம் எடுத்துக் கொண்டு சொல்லித் தரவேண்டுமென்றுதான் இந்த சீரோ ரிசல்ட்டைப் பொறுத்த மட்டில் நாம் வலியுறுத்த வேண்டியதாக இருக்கிறது. காரணம், ஒரு ஆசிரியர் ஒரு டியூஷன் வைத்துக்கொண்டால்கூட, அந்தப் பையனாவது பாஸ் செய்திருப்பான். ஆகவே, ஒரு பையன் கூட பாஸ் செய்யவில்லையென்பதில், ஓரளவுக்கேனும் பொறுப்பை பள்ளித் தலைமை ஆசிரியரும், பள்ளி ஆசிரியரும் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதற்கடுத்த ஆண்டிலே அத்தகைய குறைபாடுகள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டிய நிலையிலே நிச்சயம் பாடுபட்டாக வேண்டுமென்பதை மட்டும் நான் இப்பொழுது சொல்லிக் கொள்கிறேன்.

நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர்களுக்குப் பணிப்படி.

* வினா எண். 547—திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர்கட்கும் பணிப்படி வழங்கும் திட்டம் உண்டா?

1981 மார்ச் 30]

(ஆ) ஆம் எனில், இந்தக் கல்வி ஆண்டிலிருந்து அமுல் நடத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடுநிலைப் பள்ளியினுடைய ஆசிரியர்களுக்கு பணிப்படி எந்த அளவிலே கொடுக்கலாம், எவ்வளவு கொடுப்பதாக அரசு ஆய்ந்து வருகிறது என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளியினுடைய ஆசிரியர்களாக இடைநிலைத் தகுதி பெற்ற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் ரூபாய் 15 பணிப்படி தந்து கொண்டிருக்கிறோம். ஆனால், பி.டி. பட்டம் பெற்ற ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படும்போது, அவர்கள் உயர்ந்த அளவுக்குச் சம்பளம் பெற்றிருப்பதாலே, அவர்களுக்குப் பணிப்படி தரக்கூடாது என்ற ஒரு முடிவெடுத்து தராமல் இருந்து வருகிறோம். மூன்றாவது சம்பளக் கமிஷனும் தரவேண்டியதில்லையென்றுதான் சொல்லியிருக்கிறது. ஆனால், இப்பொழுது ஆசிரியர் சங்கங்களும் மற்றவர்களும் கேட்டுக் கொண்டிருப்பதால் நாம் அதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

உயர்நிலைப்பள்ளிகளில் ஆங்கில மொழிப்பாடம் கற்பித்தல்.

*வினா எண். 548—திரு. கே. நாராயணசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப்பள்ளிகளில் ஆங்கில மொழிப் பாடம் கற்றுத்தர ஆங்கில இலக்கியம் பயின்ற பி.ஏ., பி.எட்., முடித்த பட்டதாரிகள் 1978–79, 1979–80 ஆண்டுகளில் நியமிக்கப்பட்டுள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) 1978–79 ஆம் ஆண்டில் எவரும் நியமிக்கப்படவில்லை. 1979-80 ஆம் ஆண்டில் மூன்று பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, பல உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம், கணக்கு, விஞ்ஞானம் போன்றவற்றைப் பயிற்றுவிக்க ஆசிரியர்கள் இல்லாமல் அங்கே பாதிக்கப்படுகிறது. அதே நேரத்தில், படித்தவர்கள், பட்டம்